# சங்க இலக்கியமும் இனவரைவியலும்

**கோ.சதீஸ் / K.Satish***
பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சீர்காழி / MGR Arts & Science College Sirkali
arasu,athiyamaan75@gmail.com

Manuscript received 11 April 2021
Manuscript accepted 14 June 2021
*Corresponding author/First Author

**Abstract**
The Tamil Classical Sangam Literature is often treated as source to trace the social, cultural, and the civilization of ancient Tamil. Though there has been many endeavors have been completed, there were still much to be explored and studies. New studies offer new insights into acknowledging the ancient society in detail. Still new arrival of extravagations extends the spectrum into another level. One that worthy of studying is the social structure of the ancient society. It has well established that the ssocial structure of Sangam society was classified based on local landscape and it has been designed using the concept of Tinai and its classifications. An ethnic group living in specific eco-zone with unique culture can be called Tinai culture. ait is delineated in Sangam classics. This can be attributed to empirical sources like hero-stones, coins, and others. By way of analysing these sources, we can identify the different layers in Sangam society. This article focuses on varied ritual systems that is described in Sangam Literature.

**Keywords:** Literary Anthropology, Sangam literature, Ethnography

**ஆய்வுச்சுருக்கம்**
சங்ககாலச் சமூக அமைப்பு நிலபாகுபாட்டின் அடிப்படையில் வரையறுக்கப் பட்டுள்ளது. அதனைத் ‘திணைச்சமூகம்’ என்னும் சொல்லாடல் மூலம் குறிக்கிறோம். ஒருகுறிப்பிட்ட நிலவரையறைக்கு உட்பட்ட பகுதியில் வாழும் மக்களைத் திணைச்சமூகம் என்றும் அம்மக்களின் வழக்கங்களைத் திணைப்பண்பாடு என்றும் அழைக்கிறோம். இதற்கு இலக்கியத் தரவே அடிப்படையாக அமைகிறது. இவை தவிர பிறசான்றுகளும் உள்ளன. நடுகற்கள், காசுகள் போன்ற சான்றுகள் இலக்கியத்திலும் கிடைக்கின்றன. இன்று வரை கிடைத்த தரவுகளின் அடிப்படையில் திணைச்சமூகத்தின் பண்பாடுகளை ஓரளவு மீட்டுருவாக்கலாம். சங்க கால இலக்கியத்தின் வழி சமூகத்தை ஆராய்கிறபோது அதனுள் பன்மை அடுக்கு அமைப்பு (multi layer system) இருப்பதை உணரமுடிகிறது. இந்தக் கட்டுரை சங்க இலக்கியத்தில் காணப்படும் சடங்கின் பன்மை அடுக்கு நிலையினை முன்வைகிறது.

**கருச்சொற்கள்**: இலக்கிய மானிடவியல், சங்க இலக்கியம், இனவரைவியல்

**முன்னுரை**

மனிதனோடு தொடர்புடைய அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய துறையாக மானிடவியல் விளங்குகிறது. இலக்கிய மானிடவியல், மானிடவியலில் தற்போது வளர்ந்து வரும் ஒரு புதுத் துறையாகும். இவ்வகையான ஆய்வுகள் மேலைநாடுகளில் சில ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கிவிட்டாலும், தமிழில் மிகச்சில ஆண்டுகளாக இவ்வகையான ஆய்வு போக்கு வளர்ந்துவருகிறது. குறிப்பாகப் பக்தவத்சலபாரதியின் பாணர் இனவரைவியலைக் குறிப்பிடலாம். மானிடவியல் ஆய்வுகளைச் சங்க இலக்கியங்களுக்குச் செய்யவேண்டும் என நகர்த்தியவர் பேராசிரியர் இரா.கோதண்டராமன் அவர்கள். இதனைப் பக்தவத்சலபாரதி தன்னுடைய மானிடவியல் கோட்பாடுகள் என்னும் நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். இலக்கிய மானிடவியல் என்னும் பயில்துறையை ஆழமாகவும் விரிவாகவும் வளர்த்தெடுக்க வேண்டும் என்றும் அம்முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார் (பக்தவத்சலபாரதி, 2012, ப.xiii).

இலக்கியத்தின் வழி மானிடவியல், மானிடவியல் வழி இலக்கியம் என்னும் இருவழிப் போக்கை அடிப்படையாகக் கொண்டு இலக்கியத்தைப் புரிந்து கொள்ளவும் இலக்கியத்திற்கும் சமூகம், பண்பாடு ஆகியவற்றிற்கிடையிலான உறவுகளை விளக்கவும் பல்புலம் சார்ந்த அறிவு இன்றியமையாதது. இதற்கு மானிடவியல் மிகவும் துணைபுரியக்கூடியது. இலக்கியத்தின்வழி பண்பாட்டை அறிந்துகொள்ள இயலும் என்பது அண்மைக்காலக் கருத்தியலாகும். இலக்கியங்கள் தொல்லியல்சார் மானிடவியல் (வரலாற்று மானிடவியல்) தரவுகளாகக் கருதப்படுகின்றன. இந்தப் பின்புலத்தில் இலக்கிய மானிடவியல் என்னும் தனித்துறை தற்போது வளர்ந்து வருகிறது. தொல் சமூகப்பண்பாட்டு வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்ய இத்துறை பயன்படுகிறது.

இலக்கியம் என்பது ஒரே சமயத்தில் பண்பாட்டுப் படைப்பாகவும் பண்பாட்டைப் படைக்கக் கூடியதாகவும் திகழ்கிறது மானிடவியல் உற்று நோக்குவதாகவும் வாசிப்பதாகவும் விளக்கம் செய்வதாகவும் அமைகிறது (Angelis, 2003, ப.2 & தனஞ்செயன், 2014, ப.6) எழுத்தறிவுப் பண்டாட்டில் உருவாக்கப்படும் இலக்கியப் படைப்புக்களை முதன்மை ஆதாரமாக அணுகி அவற்றில் உலவும் மக்களையும் அம்மக்களுடைய பண்பாடு நடத்தைகளையும் மானிடவியல் தரவுகளாக இனம் கண்டு அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஆய்வாக அமைவது இலக்கிய மானிடவியல் (தனஞ்செயன், 2014, ப.7).

இந்த ஆய்வின் அடிப்படையினைத் தொடங்கி வைத்தவர்கள் கலாநிதி க.கைலாசபதி, பேரா.கா.சுப்பிரமணியன், ஆ.சிவவசுப்பிரமணியன் ஆகியோர் தொடக்க காலங்களில் பங்காற்றியுள்ளனர். அவர்களைத் தொடர்ந்து பேரா.க.ப.அறவாணன், பேரா.சிலம்பு ந.செல்வராசு, பேரா. பக்தவத்சலபாரதி (இலக்கிய மானிடவியல்), பேராசிரியர் தனஞ்செயன் (தமிழில் இலக்கிய மானிடவியல்), ஞா.ஸ்டீபன் (தொல்காப்பியத்தில் இனவரைவியல்) போன்ற அறிஞர்கள் இலக்கிய மானிடவியல் துறையில் ஈடுபட்டுள்ளனர்.

**இனவரைவியல்**

மானிடவியல் துறையில் தொடக்க கால ஆய்வு முறை இனவரைவியல் ஆகும். மிகநீண்ட நெடிய காலத்திலிருந்தே இவ்வாய்வு வளர்ந்துவருகிறது. இனவரைவியல் பெரும்பான்மை கள ஆய்வுகளின் அடிப்படையில் வரையறுப்பதாகும். ஒரு குறிப்பிட்ட இனம் குலத்தின் மக்களைப் பற்றிய செய்திகளை எழுதுதல் ஆகும். இன வரைவியல் ஒரு சமுதாயத்தை அறிய உதவுகிறது. தனித்தனிச் சமுகம் பற்றிய இனவரைவியல் ஆய்வுகள் ஒன்றுபட்டோ வேறுபட்டோ இருக்கிறது. இதன் வேறுபட்ட தன்மைகளைக் கருத்தில் கொண்டு அனைத்துச் சமுதாயத்திற்கும் பொதுவிதியை வகுப்பது தலையாய நோக்கம் ஆகும். மானிடவியல் பயில்வோர் தொடக்கத்தில் இன வரைவு ஆய்வினை மேற்கொளவர். தற்காலங்களில் ஆய்வின் துணைப்பகுப்பிற்கு (sub discipline) ஏற்ப பல வகையான மாறுதல்களை அடைந்துள்ளது. சான்றாகச் சுற்றுப்புறச்சூழலியல் (envermental studies) அனைத்துத் துறையுடனும் இணைத்துப் பார்க்கப்படுகிறது. பக்தவத்சல பாரதி, ‘ஒரு தனித்த சமூகத்தின் பண்பாட்டைப் பற்றி மானிட வியலாளர்கள் அச்சமூகத்தாரோடு நீண்ட காலம் ஒன்றி வாழ்ந்து ஆய்வு செய்து அதனை, எழுத்தில் எழுதியளிக்கும் தனிவரைவு நூலே இனவரைவியல் எனப்படும். இத்தகு நீண்ட காலக் களப்பணியில் உற்றுநோக்கிப் பண்பாட்டை விவரிக்கும் தனிவரைவுகளை (monographs) எழுதும் மானிடவியலர்கள் இனவரைவியலர் (ethnographer) எனப்படுவர்’ (பக்தவத்சல பாரதி, 2005, பக்.387) என்று குறிப்பிட்டுள்ளார்.

**இனவரைவியல் கூறுகள்**

ஓர் அயற்பண்பாட்டை விளக்க முற்படும் போது எந்த ஒரு சிறந்த இனவரைவியல் தொகுப்பும், பின்வரும் முதன்மையான கூறுகளைப் பற்றி விளக்குவதாக அமையப் பெறுகின்றன (பக்தவத்சல பாரதி, 2003, ப.118-119). அவை, 1. புவிச்சூழல், 2. சுற்றுச் சூழல், 3. காலநிலை, 4. குடியிருப்பு நிலை, 5. பொருள்சார் பண்பாடு, 6. குடும்ப அமைப்பு, 7. திருமண முறை, 8. உறைவிட முறை, 9. வாழ்வியற் சடங்குகள், 10. குழந்தை வளர்ப்பு முறை, 11. பண்பாட்டு வயமாக்கமுறை, 12. மக்களின் உளவியற் பாங்குகள், 13. மணக்கொடை, 14. மணவிலக்கு முறை, 15. வாழ்க்கைப் பொருளாதாரம், 16. தொழிற்

பகுப்பு, 17. உற்பத்திமுறை, 18. நுகர்வு முறை, 19. பங்கீட்டு முறை, 20. பரிமாற்ற முறை, 21. கைவினைத் தொழில்கள், 22. அரசியல் முறை, 23. அதிகார உறவுகள், 24. சமூகக் கட்டுப்பாடு, 25. மரபுசார் சடங்குகள், 26. சமய நம்பிக்கைகள், 27. சடங்குகள், 28. வழிபாட்டு முறைகள், 29. மந்திரம், 30. சூனியம், 31. விழாக்கள், 32. இசை, 33. விளையாட்டுகள், 34. அழகியற் சிந்தனைகள், 35. வழக்காறுகள் 36. ஈமச் சடங்குகள் 37. பிற தொடர்புடைய செய்திகள் எனும் வகையில் இனவரைவியல் கூறுகள் அமையப் பெறுகின்றன.

### சங்க இலக்கியமும் – பன்மை அடுக்கு அமைப்பும் (Multi Layer System)

உலக இலக்கியங்களில் தமிழ் இலக்கியங்கள் தொன்மையான இலக்கியங்கள் ஆகும். செயற்கைத் தன்மை இல்லாத இயற்கையான வாய்மொழி மரபினைச் சமஅளவு உள்வாங்கிக் கொண்டு, தொல்குடி மரபினை நன்கு பதிவு செய்துள்ளன. பண்பாட்டு அடையாளங்கள் மிகுதியாக உள்ளன.

சங்க கால இலக்கியங்கள் வெவ்வேறு காலத்தில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து தோன்றியவை. அதில் பல்வேறு சமூக அடுக்குகளும் பண்பாட்டுப் பகிர்வும் அல்லது ஏற்றலும் (cultural adoptation) காணப்படுகின்றன. தொல் மரபிலிருந்து புதிய சமூக அமைப்பிற்கு மாறி வருகின்ற (transitional period) ஒரு கால கட்டத்தில் ஏழுந்தவை. இத்துனைத் தொன்மையான இலக்கியமாக இருந்தாலும் அவை ஒரு காலக்கட்டத்தில் தொகுக்கப்பட்டும், பிற்காலச் சோழர்காலத்தில் உரைகள் எழுதப்பட்டன. அக்காலக்கட்டத்தினை ஒரு மறுமலர்ச்சி காலம் எனலாம். அதன்பின் தொல்காப்பியம் நூலின் உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டி வந்துள்ளனர்.

ஐரோப்பிய வருகையும் அச்சு இயந்திரங்களின் வளர்ச்சியும் சங்க இலக்கியக் கல்வி பரவலாக்கப்பட்டது. சுவடியில் இருந்த பல இலக்கியங்களை ஆறுமுகநாவலர், சி.வை. தாமோதரம்பிள்ளை, உ.வே.சா. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் தி.சௌரிபெருமாள் அரங்கன் போன்ற தமிழ் அறிஞர்கள் அதன் அச்சில் பதிப்பிக்கலாயின.

சங்ககாலச் சமூக அமைப்பு நிலபாகுபாட்டின் அடிப்படையில் வரையறுக்கப் பட்டுள்ளது. அதனைத் ‘திணைச்சமூகம்’ என்னும் சொல்லாடல் மூலம் குறிக்கிறோம். ஒருகுறிப்பிட்ட நிலவரையறைக்கு உட்பட்ட பகுதியில் வாழும் மக்களைத் திணைச்சமூகம் என்றும் அம்மக்களின் வழக்கங்களைத் திணைப்பண்பாடு என்றும் அழைக்கிறோம். இதற்கு இலக்கியத் தரவே அடிப்படையாக அமைகிறது. இவை தவிர பிறசான்றுகளும் உள்ளன. நடுகற்கள், காசுகள் போன்ற சான்றுகள் இலக்கியத்திலும் கிடைக்கின்றன. இன்று வரை கிடைத்த தரவுகளின் அடிப்படையில் திணைச்சமூகத்தின் பண்பாடுகளை ஓரளவு மீட்டுருவாக்கலாம். சங்க கால இலக்கியத்தின் வழி சமூகத்தை ஆராய்கிறபோது அதனுள் பனை அடுக்கு அமைப்பு (multi layer system) இருப்பதை உணரமுடிகிறது. இந்தக் கட்டுரை சங்க இலக்கியத்தில் காணப்படும் சடங்கின் பன்மை அடுக்கு நிலையினை முன்வைகிறது.

### சடங்கு (Rituals)

சடங்குகள் புனிதத் தன்மை என்னும் பிரம்மையைத் தோற்றுவித்து அதன்மூலம் சமயம் என்னும் முறையை ஏற்படுத்திய நிகழ்வில் இரண்டாம் கட்டமாகச் சடங்குகள் ஏற்பட்டன. சடங்குகள் சமயத்தின் கருப்பொருளாகக் கருதப்பட்டன. புனிதத் தன்மையோடு தொடர்புகொள்ள மேற்கொள்ளப்படும் முறையான செயல்முறைகள். புனிதத் தன்மையைப் பாதுகாக்கவும் தீயவற்றிலிருந்து தனிமைப்படுத்தி தூய்மையாக வைக்கவும் மேற்கொள்ளப்படும் செயல்முறைகள்.

தெய்வத்திற்கு மனம் உண்டு என்றும் அந்த தெய்வத்தின் மனதை நிறைவு செய்யும் பொருட்டு மேற்கொள்ளப்படும் செயல் சடங்கு என அழைக்கப்படுகிறது. சமூக அமைப்பில் சடங்கு பெரும்பங்கு வகிக்கிறது. சமய நிகழ்வு சடங்கு அனைவரையும் ஒன்றுபட வைக்கிறது. தொல்சமயம் முதல் இன்றைய பெரும் சமய அமைப்பு வரை அனைத்திலும் இடம் பெரும் சடங்குகள் மக்களை இனக்கமுறச் செய்து, ஒன்றுபட வைக்கிறது.

**சடங்குகளின் இருவகை**

சடங்குகள் சமயச் சடங்கு, வாழ்வியல் சடங்கு என்ற இரு பெரும்பிரிவாகப் பிரிக்கலாம். சங்க காலத் தமிழர்களிடம் பல்வேறு வகையான சடங்குகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. அவற்றை அனைத்தையும் தொகுத்து “சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும்” என்னும் பொருண்மையில் மு.சண்முகம்பிள்ளை எழுதியுள்ளார்.

சங்க சமூகத்தை ஆய்வு செய்வதற்குத் தரவுகள் தொகுப்புக்கள் நிறைய தமிழில் கிடைக்கின்றன. ஆனால், அவை மேலும் கோட்பாட்டுப் பின்புலத்தில் பொதுமைப்படுத்தி ஆய்வு செய்ய வேண்டும். அதற்காகக் களங்கள் தமிழில் மிகுதியாக உள்ளன. இதில் கூடுதலான பயனாகக் கருதவேண்டியவை சங்க சமூகத்தில் காணப்படும் பல நிகழ்வுகள் தமிழகப் பழங்குடிகளிடம் இன்றும் வழக்கில் நிலவிருகின்றன அதனை ஒப்புநோக்கிப் பார்க்கவும் இடமுள்ளது.

**மணச்சடங்கும் முறைகளும்**

திருமணநிகழ்வு இயங்கும் முறையினை அமைப்பு அடிப்படையில் இருவிதமாகப் பிரிக்கலாம். சங்க கால இலக்கியங்களிலே தொல்மணச் சடங்குமுறை, பிறப்பண்பாட்டு ஏற்பு (cultural adoptation) நடந்துள்ளன என்பதை அறியமுடிகிறது. சங்கப் பாடல்களில் உள்ள திருமணமுறைகளில் தொல் கூறும் அதனுடைய வளர்ச்சியையும் அறியமுடிகிறது அதே போல் பிற பண்பாட்டு ஏற்பு சங்க மருவிய இலக்கியங்களில் காணமுடிகிறது குறிப்பாகச் சிலப்பதிகாரத்தில் காணப்படும் திருமணமுறை தமிழர்கள் தாம் பின்பற்றி வந்த பண்பாட்டில் இருந்து பிறப் பண்பாட்டினை ஏற்றுள்ளனர் என்பதை அறியமுடிகிறது. ஆகவே, காலந்தோறும் இதுபோல் பண்பாட்டு ஏற்பு பண்பாட்டு பரவலும் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன.

**திருமண வகைகள்**

திருமண வகைகள் பல இருந்தாலும், அடிப்படையில் திருமணமுறைகள் இரண்டாகப் பகுக்கப்படுகின்றது. 1. அகமணம் (endogamy), நெருங்கிய உறவில் திருமணம் செய்துகொள்வது மற்றொன்று, 2. புறமணம் (exogamy) இது உலகத்தில் பரவலாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

**அகமணமுறை** தன்னுடைய சாதி அல்லது குழுவிற்குள் மட்டும் மணம் செய்து கொள்வது. அ)இந்தியச் சூழலில் சாதியத் திருமணங்களை அகமணக் குழுவாகக் கொள்ளலாம். ஆ)மேலைநாடுகளில் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினர் மட்டுமே திருமணம் செய்துகொள்கின்றனர் இதுவும் ஒரு வகை அகமணமே. நிறம் பொருளாதாரம், கல்வி, ஆகியவை வர்க்க வேறுபாடுகளுக்குக் காரணமாக அமைகின்றன. இ)பழங்குடிகளில் [தோடர்]➔[தோடர்] திருமணம் செய்துகொள்கின்றனர் இவர்களைத் தவிர பிற பழங்குடிகளான படகர், இருளர், கோத்தர் போன்ற குழுக்களில் மணம் முடிப்பதில்லை. ஈ)நிலப்பரப்புச் சார்ந்த அகமணம் அமைகின்றது, உ). சிற்றூர் அகமணம் என அகமணம் பல நிலைகளில் உள்ளது.

**புறமணம்** அகமணத்திற்கு நேர் எதிரானது. வேற்றுக்குழுவில் திருமணம் செய்து கொள்வது. ஒரு சாதிக்குள் எந்த ஒரு வரையும் திருமணம் செய்து கொள்ள முடியாது. வேற்று வரைவினை (cast exogamy) நாம் புறமணமாகக் கொள்ளலாம். பழங்குடிச் சமுதாயங்களில் - குலங்கள் (clans) ஒவொன்றும் புறமணக்குழு ஆகும்.

**மணத் துணையைத் தேடும் முறைகள்-8**

> *‘மணத்துணையைத் தேர்ந்தெடுக்கும் முறைகளை எண் வகை திருமணம் எனத் தமிழ் இலக்கணத்தில் பதிவாகியுள்ளது மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள்’* **(தொல்காப்பியம், பொருளதிகாரம். களவியல் -1)** அது வட இந்தியாவில் வழங்கப்பட்ட திருமணமுறைகளாகும், அதனால் தொல்காப்பியர் மறையோர் தேயம் எனக் குறிப்பிடுகிறார். இதில் காந்தர்வ மணம் மட்டும் தமிழர்கள் மேற்கொண்ட களவு மணமாகும் என இலக்கண வல்லார் உரைத்துள்ளனர். மானிடவியல் துறையைச்

சார்ந்தார்களும் எட்டு வகையான திருமணமுறையினைக் குறிப்பிடுகின்றனர். அவை; 1.தகுதிகாண் திருமணம், 2.கடத்தல், 3.தேர்வுத், 4.மணப்பெண் பணம்கொடுத்துத் திருமணம் செய்தல், 5.பணிசெய் திருமணம், 6.பரிமாற்றத் திருமணம், 7.உடன்போக்கு (elopement), 8.வலிய மணம் ஆகிய வையாகும் இதில் தகுதிகாண் திருமணம், மணப்பெண் பணம்கொடுத்துத் திருமணம், பணிசெய்/ சேவை மணம், உடன்போக்கு திருமணம் ஆகிய நான்கு வகைகளும் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. முல்லைத்திணையில் வரும் காளையை அடக்கும் முறை தகுதிகாண் திருமணமாகும், காதல் வாழ்வில் ஈடுபட்டுள்ள இளைஞன் எவராக இருப்பினும் மணப்பெண் வீட்டாருக்கும் பண்ம் கொடுக்கும் வழக்கம் சங்க காலம் முழுவது நிலவிய பண்பாடாக இருந்திருக்கவேண்டும். சேவை மணம் மிகச் சிறுபான்மையாக ஒரு பதிவு மட்டும் உள்ளது. களவு வாழ்வில் ஈடுபடும் இளைஞன் உடன்போக்கில் ஈடுபடுவர் இது தொல்பண்பாடு மரபாகும். இதனையே இலக்கணம் கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே எனக் கூறுகிறது.

சங்க இலக்கியத்தில் திருமணம் என்னும் சொல் வதுவை, மன்றல், மணம் போன்ற வேறு பிற சொற்களாகும் வழங்கப்பட்டுள்ளது. மனிதனுக்கு மனிதன் செய்யப்படும் சடங்கு திருமணமாகும். '*பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப'* (தொல்.பொருள்.கற்பியல்-4) *'மறையோர் தேஎத்து மன்றல்'* (தொல். பொருள். களவியல்-1) என இலக்கணம் கூறுகிறது. சங்க கால திருமண அமைப்பினை பொதுவாக நான்காகப் பிரிக்கலாம் அவை; 1.மணத்தேர்வு, 2.மணக் காலம் / பொழுது , 3.மண மரபு , 4.மணமுறை ஆகியவை ஆகும்.

**மணத்தேர்வு**

பண்பாடு, மனப்போக்கு காலம் இவற்றுக்கேற்ப மணத்தேர்வு மாறுபடும். தொல் தமிழர் களவு மணம் பெரும்பான்மையன வழக்கமாகும் ஆனால் அதற்குள்ளும் ஒரு சிறுசிறு அமைப்பாக வளர்ச்சி அடைந்து வருவதைப் பார்க்கமுடிகிறது. **1.**வீரம் **(**ஏறுதழுவுதல்**), 2.**சமுதாயப்பிரிவு **(**மகட்பாற்காஞ்சி**) 3.**சேவைமணம் ஆகிய மூன்று நிலைகளில் மணத்தேர்வினைச் செய்துள்ளனர்.

### 1. வீரம் (ஏறுதழுவுதல்)

ஆயர் வாழ்வில் நிலவிய மணமுறை (கலி.101:39-42) வீரம் அல்லது தகுதிகாண் திருமணமாகும். *மல்லல் மழவிடை யூர்ந்தார்க்கு உரியள் இம் / முல்லையம் பூங்குழல் தான்* (சிலம்பு:ஆய்ச்சியர் குரவை:சுட்டு-3) வலிமை மிக்க இந்த இளைய காளையினை ஏறிச் செலுத்தியவர்களுக்கே இம் முல்லை மலரினைச் சூடிய அழகிய கூந்தலை உடையவள் உரியவள் ஆவாள் என உரையும் பகர்கிறது. வீரத்தின் அடிப்படையில் மணமகனைத் தேர்வு செய்துள்ளனர். இது முல்லைத் திணையின் பாற்படும் களவொழுக்க நிலை ஆகும். காளையை அடக்கிய செயல் கற்பு வாழ்விற்கு வழிவகுப்பது. காளைப் போர் (bull – fight) உலகம் முழுவதும் உள்ளது. தன்நிலம் சார்ந்த பழக்கவழக்கம் உடைய முல்லைநில மக்கள் அல்லது ஆயர்கள், மணமகனை ஒரு சடங்கின் மூலம் அடையாளம் காணுகின்றானர். ஏறுதழுவுதல் ஏதோ ஒரு வீரவிளையாட்டுப் போலத் தோன்றினாலும் இது ஒரு வகையில் புறமணமுறையினைத் தடைசெய்கிறது. அதே வேளையில் இது ஒரு தகுதி காண் திருமணம் (Probationary Marriage) ஆகும். ஆயர் சமூகத்த்துக்குள்ளேயே திருமணம் நடைபெற்றுள்ளதற்கான சான்றாக பின் வரும் கலித்தொகைப் பாடலைச் சுட்டலாம்.

*'ஆயர்மகனாயின், ஆய்மகள்நீயாயின்*
*நின்வெய்ய னாயின், அவன் வெய்யை நீ ஆயின்*
*அன்னை நோதக்கதோ இல்லைமன் நின் நெஞ்சம்*
*அன்னை நெஞ்சாகப் பெறின்'* **(**கலி**.107)**

அவனோர் ஆயர்மகன் நீயோர் ஆயர்மகள் அவன் உன்னை விரும்புகிறான் நீயும் அவனை விரும்புகின்றாய் அன்னை நொந்து கொள்வதற்கு இதில் எதுவும் இல்லை. எனத் தோழி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

## 2. இனக்குழுவும் உட்பிரிவுகளும் (திருமணம்)

சங்க இலக்கியத்தில் பல் வகையான தொல்குடிகள் காணப்படுகின்றன. ஆனால் அவற்றிற்குள் பலகிளை அல்லது படிநிலைகள் இருந்திருக்கின்றன. சான்றாக முல்லை நிலப் பகுதியில் வாழக்கூடிய ஆட்டிடையன் மாட்டிடையன் வாழ்ந்திருக்கின்றனர். இவர்கள் இருவரையும் ஆயர் எனப் பொதுவாக அழைத்தாலும் அதற்குள் சில உட்கிளைகள் நிலவியுள்ளன. இவர்கள் இருவருக்கும் பெண்கொடுத்து பெண் எடுக்கும் வழக்கம் இல்லை என்பது புலனாகிறது. அதனை ஒரு சமூக ஏற்றத்தாழ்வாகவே (social hierarchy) பார்க்க முடிகிறது. ‘இடையர்கள் உள்ளும் சமூகப் படிநிலைகள் இருந்துள்ளன என்பதற்குச் சான்றுகள் கிடைக்கின்றன. பகை அஞ்சாத புல்லினத்து ஆயர் மகனை *‘நீ ஆயின், குடம் சுட்டும் நல்லினத்து ஆயர் எமர்’* (கலி.113) என்னும் பதிவுகள் ஆடு மேய்ப்பவர்களுக்கும் மாடு மேய்ப்பவர்களுக்கும் இடையாலான சமூகப் படிநிலையினை அறியமுடிகிறது’ (சதீஸ், 2016).

*‘எல்லா இஃதொன்று கூறிகுறும்பிவர்*
*புல்லினத்தார்க்கும் குடஞ்சுட்டவர்க்கு மெங்*
*கொல்லேறு கோடல் குறையெனக் கோவினத்தார்*
*பல்லேறு பெய்தார் தொழூஉ’* **(**கலி.107**)**

ஆயர் என்னும் முல்லைநிலப் பகுப்பிற்குள் ஆட்டிடையர், பால்கொடுக்கும் பசுவினத்தார், கோவினத்தார் (கோவினத்தார் அனைத்தையும் குறிக்கின்ற அதிகாரம் பெற்றோராக இருக்கலாம்) என்னும் முப்பிரிவு உடையவர் காணப்படுகின்றனர். மணஉறவுக்கு தடை இல்லை. இது அகமணஉறவுநிலை பெற்று இருந்துள்ளது.

மலையாளிப் பழங்குடிகளிடமும் இவ்வகையான வழக்கம் இன்றும் வழக்கில் உள்ளது. தாங்கள் வாழும் பகுதியை மலை முகடுகளை மோடு என வழங்கப்படுகிறது. ஒரு மோட்டிற்கும் இன்னொரு மோட்டிற்கும் திருமண உறவு ஏற்பதில்லை. சில வேளைகளில் சேவை மணத்தில் மூலம் திருமணங்கள் நடந்துவந்துள்ளன. (ரே.கோவிந்தராஜ் தகவலாளர் ஜவ்வாதுமலை) இதுபோன்ற சூழலில் இனக்குழுக்குள் சில கிளைகளும் (band) அவற்றிற்குள் சில ஏற்றத்தாழ்வுகள் நிலவுவதை அறியமுடிகிறது.

## 3. சமுதாயப்பிரிவு

மணத்தேர்வில் அரசு உருவாக்கம் மலர்ந்த பிறகு பெருவேந்தர்கள், முதுகுடி மன்னர்களிடமும், குறுநில மன்னர்களிடமும் பெண்கேட்டுச் சென்றுள்ளனர் இவர்கள் இனத்தூய்மை காப்பதற்கும் சமூகத்தின் பிற காரணங்களுக்காவும் பெண் கொடுக்க மறுத்துள்ளனர். இதுவே மகட்கொடை மறுத்தல் ஆகும் போர் செய்து அப்பெண்ணை மணந்துள்ளனர் இது தொடர்பாக மகட்பாற்காஞ்சி திணைப்பாடல்கள் விளக்குகின்றன. சீவக சிந்தாணி காலம் வரை இது தொடர்ந்துள்ளது என்பதை அறியமுடிகிறது. ‘*நலிவுஇல் குன்றோடு காடுறை நன்பொருள் புலியனார் மகள் கோடலும் பூமிமேல் வலியின் மிக்கவர் தம்மகள் கோடலும் நிலைகொள் மன்னர் வழக்கு*’ (சீவகசிந்தாமணி விமலையார் இலம்பகம்-பாடல்.11)

## 4. சேவை மணமும் - முலைவிலையும்

சங்கப்பாடல்களில் சிறுபான்மையாக சேவை மணம் நிகழ்ந்துள்ளது பற்றி குறிப்புகள் கிடைக்கின்றன. மணமகன் மணமகளின் பெற்றோரின் வீட்டில் பணி செய்து மணம் முடித்தல் சேவை மணம் ஆகும். சங்க காலங்களில் பெண்ணிற்கு பொருள் கொடுத்து மணம்முடிக்கவேண்டும் பரிசம் கொடுத்து பெண்ணினைப் பெற இயலாத போது அந்த பெண் வீட்டில் தங்கி சேவை செய்து மணமுடிக்கும் ஒரு வழக்கம் இருந்துள்ளது. அப்பெண் வீட்டிற்கு முலைவிலை சிறுவிலை பரியம், கொடுக்கப்பட்டதாகவும் இலக்கியக் குறிப்பு காணப்படுகின்றது.

‘*இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தார்*
*கடுங்கண் கோசர் நியம மாயினும்*
*உறுமெனக் கொள்குநர் அல்லர்*
*நறுநுத லரிவை பாசிழை விழையே’* (அகம். 90)

என்ற பாடலில், ‘பாசிழை விழை’ என்றும்,

‘*சிறுவளை விலையென பெருந்தேர் பண்ணியெம்*
*முன்கடை நிறீஇச் சென்றிசி னோனே’* (நற்.300)

என்ற பாடலில், சிறுவளை விலை என்றும் கூறப்படுகின்றது. இதன் மூலம் பரிசாக பொருள் கொடுக்கப்பட்டதை அறிய முடிகிறது. முலைவிலை என்பது தனக்குப் பிறக்கப்போகும் குழந்தைக்குப் பால் கொடுப்பதால் அதற்கு விலையாக பொருள்கள் கொடுக்கப்பட்டன. இங்கு முலை என்பது ஆகுபெயராக நின்று தாய்ப்பாலைக் குறிக்கிறது. இதற்கு மேலும் சான்றாக பட்டினத்தார் பாடலில் தன் தாய் இறந்தபோது இறுதிச்சடங்கு செய்கிறபோது அவர் பாடும் பாடலில் “செய்ய இருகைப் புறத்தில் ஏந்தி கனகமுலை தந்தாளை எப்பிறப்பில் காண்பேன் இனி” (பட்டினத்தார் அன்னை இறந்தபோது பாடல்-1) என அவர் கூறுவதிலிருந்து அறியமுடிகிறது.

### மணக் காலம் / பொழுது

சங்க காலத் தமிழர்கள் பெரும்பாலும் பாடல்களின் அடிப்படையில் திருமணத்திற்கு உரிய காலமாக வேங்கைமலர் மலரும் இளவேனில் காலத்தினைத் தேர்வு செய்துள்ளனர். ‘*வேங்கை தந்த வெற்பணி நன்னாள்’* (நற்.336) ‘*வேங்கை மலரின் சிறப்புக் கருதி நன்னாள் வேங்கை’* (நற்.384), ‘*கணிவாய் வேங்கை’* (நற்.373) என அழைப்பட்டுள்ளது. வேங்கை அரும்பும் காலம் தினைமுற்றும் காலம் அதலால் அம்மலர் அரும்பியதைக் கண்ட கானவர் தினையைக் கொய்ய ஈடுபடுவர். உணவுக்குத் தேவையான பொருள்கள் சேமிக்கப்படும். இயற்கையின் பண்புகூறுகளைக் கொண்டு பருவத்தை அறிந்துள்ளனர். அதே போல் சந்திரன் உரோகிணியோடு சேர்ந்து இருக்கும் நாளில் திருமணம் செய்துள்ளனர் ‘*திங்கள் சகடம் மண்டிய துகள் தீர்க் கூட்டத்து*’ (அகம் 136), இது அடுத்த கட்ட வளர்ச்சியைக் காட்டுகிறது. ‘*வானூர் மதியம் சகடணைய வானத்து’* (சிலம்பு: மங்கல 5-7), ‘*விடியற் காலம் திருமணம் நடந்தது’* (புள்ளுப்புணர்ந்து இனியவாக. அகம்.136).

#### மண மரபு

பெண்கேட்டு நிச்சயம் செய்து திருமணம் நடந்துள்ளது. தொல்காப்பியத்தில் ‘*கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே’* (தொல் பொருள்.கற்பியல்.2)” கொடுப்போர் ஆகிய பெற்றோர்கள் இல்லாமல் உடன்போக்கிலும் திருமணங்கள் நடைபெறும் எனக் குறிப்பிடுகிறது. என் *தந்தை* கொடுக்க திருமணம் நடைபெற்றுள்ளது (*ஐங்.6*)**1**, திருமணம் செய்துகொள்வதற்கு வந்த தலைவனை நம் *சுற்றத்தார்* அவருக்கு மணம் செய்துகொடுதலை அவர் உடன்படுவார் (நற்.393)**2**, மேலும் என் தந்தையும்

அவருக்கு மணம் செய்துகொடுக்க விரும்புவார் (குறுந்.51)**3**. பெண் கேட்க நல்ல நாள் பார்த்துள்ளனர். நன்னாள் வதுவை கூடி நீடின்று' (நற்.125:5-8), 'பெண்கேட்பதற்கு மணமகன் வீட்டார் முதியவர்களையும் அறிவரையும் அழைத்து வந்துள்ளனர் (குறுந்.146, கலி.39:46-51), வேங்கை மரத்தின் கீழ் மணம்பேசி முடித்துள்ளனர், மணம் ஆண் வீட்டில் நிகழ்ந்துள்ளது**4.** மணவினைக்குமுன் நிகழும் சிலம்பு கழி நோன்பு செய்யும் வழக்கம் இருந்துள்ளது. இது பெண் வீட்டில் நிகழ்ந்துள்ளது (ஐங்.99).

மணவீட்டில் புதுமணல் பரப்பி அலங்கரிந்துள்ளனர், சகுணமாகிய புள் நிமித்தம் பார்த்துள்ளனர், பல வகையான மங்கல முழவு முழங்கியுள்ளனர். மேலும் திருமணத்தின் போது இறைச்சி உணவினை அளித்துள்ளனர்5. இது எயினரின் கூட்டுண் வாழ்க்கையின் அடுத்த கட்ட வளர்ச்சி எனலாம் இது நம்பிக்கையின் பார்ப்படும் ஒரு நிகழ்விற்கு சமூகத்தின் பல காரணிகள் சேர்ந்தே இயங்குகிறது. சங்கப் பாடலுக்குள் ஒரு நிகழ்விற்குள் பல துணைநிகழ்வுகள் அதன் அமைப்பு மற்றும் இயக்கத்தில் பன்மை அடுக்கு அமைப்பு இருப்பதை உணர முடிகிறது.

**மணமுறை**


திருமணத்தின் போது நல்ல நாள் பார்த்துள்ளனர். 1.நல்ல நாள் பார்ப்பது பருவம் அறிதலையே குறிக்கிறது. அதனால் வேங்கை மலரும் காலத்தினை அறிந்து திருமணம் நிகழ்த்தியது தொல் அமைப்பாகும் அதற்கு அடுத்த நிலையாக திங்கள்-ரோகிணியுடன் சேந்திருக்கும் நாளில் திருமணம் நடத்தியுள்ளனர். இதனைப் பன்மை அடுக்கு அமைப்பு எனலாம். 2.புள் நிமித்தம் அறிந்து , 3.கடவுள் வணங்கி, 4.திருமணம் ஆண் வீட்டில் நிகழ்ந்துள்ளது, 5.திருமணத்தின் போதுப் பந்தர் அமைத்துள்ளனர் அது இன்று வரை தொடர்கிறது, மேலும் 6.புதுமணல் பரப்பி, மணவிழாவின் போது 7.விளக்கேற்றல் வழிபட்டுள்ளனர், 8.மண முரசு முழவு முழங்கப்பட்டு, குழந்தைப் பேறுடைய வாலிழை வதுவை மன்னிய மகளிர் 9.மங்கல நீராட்டியுள்ளனர், திருமணத்தின் போது 10.புதிய ஆடை உடுத்த்தியும் அணிகலன்களும் அணிந்துள்ளனர், 11.நெல் நீர் சொரிந்து மங்கல மகளிர் வாழ்த்தியுள்ளனர், விடியற் காலை பொழுதிலேயே 12. ஊன் கலந்த சோற்றினை வரையறை இல்லாமல் வள்ளல் தன்மையுடன் அளித்துள்ளனர் 5 என்பதை சங்கப் பாடல்களின் வழி அறியமுடிகிறது.

**சங்க கால திருமணச் சடங்கும் அர்னால்டு வான் கென்னப்பின் அமைப்பும்**

ஒவ்வொரு சடங்கிற்குப் பின்னும் உலக வாழ்க்கைப் பற்றியம் மக்களின் பார்வையும் அவர்களின் கருத்தாக்கமும் அடங்கியுள்ளன. அர்னால்டு வான் கென்னப் என்னும் டச்சு நாட்டு அறிஞர் வாழ்க்கை வட்டச் சடங்குகளை மூன்றாகப் பிரித்து அமைப்பு அடைப்படையில் சடங்கு இயங்கு நிலையினை விளக்குகிறார் அவை;

1.பிரித்தல் சடங்கு (rituals of sepration )
2.நிலைமாற்றுச் சடங்கு (rituals of transition)
3.இணைத்தல சடங்கு (rituals of incorporation)

இம் மூன்றும் ஒரே சடங்கில் அமையலாம்.



தமிழர் திருமண அமைப்பில் தொடக்க காலக்கட்டத்திலிருந்து பன்மை அடுக்குநிலை அமைப்பு காணப்பட்டாலும், அதன் இயங்கு அமைப்பில் பெரிய மாற்றங்கள் ஏதும் இல்லை. நும்மனை சிலம்புகழிதல் என்னும் சடங்கு பிரித்தல் சடங்காகும், மணநிகழ்வு நிலைமாற்றுதல் ஆகும், உடன்போக்கு முதல் எவ்வகையான கற்பு வாழ்க்கையினை ஏற்று, கணவனுடன் வாழ்தல் இணைத்தல் அல்லது புதிய தகுதியை வழங்குதல் ஆகும்.

### வழிபாடுமரபு (சடங்கு)

வழிபாட்டு மரபிலும் தொல் வழிபாட்டு மரபும் பிற வழிபாட்டு மரபினை ஏற்றலும் நிகழ்ந்துள்ளது. மலையுறை அணங்கு, சூர் போன்றவை தொல் வழிபாட்டு மரபாகும். சிவன் திருமால், இந்திரன் வருணன் போன்றவை பெருமரபுக்கு உரிய பண்பாட்டு ஏற்பாகும் இவை இரண்டிற்கும் இடையில் கொற்றவை உருவாகியிருக்க வேண்டும். தொல்தமிழர் பண்பாட்டில் வேலன் வெறி அயர்தல் மிக முக்கியமான பண்பாட்டுக் கூறாக விளங்குகிறது. சங்க இலக்கியத்தில் வெறி, வெறிக்களம், வெறியயர், வெறியாடு, வேல் வல்லான், வேல் வலான் வேலன் ஆடுமகள் போன்ற சொற்றொடர்கள் பயின்று வந்துள்ளது.

பெரும்பாலும் அன்னையே வெறிஆட்டு வேண்டி நிற்கின்றாள், தெய்வத்தால் அறியப்பட்டு மாறுபாடு இல்லாமல் வெறி ஆட்டு நிகழ்த்தவேண்டும் என உணர்ந்த தாய் ஆட்டினை முருகவேலை வழிபடுகிறாள்6. (நற்.47), கடம்ப மாலையை அணிந்த வேலன் வெறிமனையில் வேண்டுதல் நிகழ்த்துகிறான் (நற்.34), கழங்கு காணல்-ஒரு வகை குறிப்பறிதல் குறிப்பார்த்தல் ஆகும். வேலன் உடலில் தேயும் வண்ணம் தலையில் ஒரு துணி கட்டப்பட்டிருந்தது, சிறுபைகள் தொங்கப்பட்டிருந்த பல தலைகளை உடைய செங்கோல் வைத்திருந்துள்ளனர். அறிவில் சிறந்தவனாக மக்கள் நம்பியுள்ளனர் அதனல் அவர்கள் முதுவாய் வேலன் என அழைக்கப்பட்டுள்ளனர்7. (அகம்.195). பெரும்பாலும் மகளின் காதல் நிலையினால் உடல் மற்றும் உள்ளத்தில் தோன்றிய மாற்றத்தினால் வேலனிடம் சென்றுள்ளனர் சில அதே நேரத்தில் உடன்போக்கில் சென்ற தலைவினையின் நிலையினை அறிந்து கொள்ள வேலனை நாடியுள்ளனர்.

> ‘*நனைமுதிர் புள்கின் பூந்தாழ் வெண்மணல்*
> *வேலன் புனைந்த வெறியார் களந்தொறும்*
> *செந்நெல் வான்பொறி சிதறி’* (குறுந்.53)

வெள்ளிய மணல் பரப்பில் வேலனால் அமைக்கப்பட்ட வெறியாட்டு எடுக்கும் இடந்தொறும் செந்நெல்லினது வெள்ளிய பொறி சிதறும் (குறுந்.53). நீண்ட நெடிய மரபுடைய சமூகத்தில் தொல் வழிபாட்டு மரபு கட்டாயம் இருக்கும் தொல் மரபிலிருந்தே அதன் அடுத்த கட்ட வளர்ச்சி அமையும்.

அணங்கு தாக்கிய பெண்ணை அதனை விரட்ட மேடான பரப்பில் செம்மறி ஆட்டினைக் குரல் வளையை அறுத்து குருதி பலி சிந்தி தினையினைப் பரப்பி பல்வேறு தெய்வங்களை வாழ்த்தி இசைக்கருவிகள் முழங்க இந்தத் தீயச்சக்தியை விரட்டினர் (குறுந்.263). பெண்ணைத் தாக்கும் முருகணங்கினை ஓட்டுதல் / விரட்டுதலே வேலன் வெறியாட்டு சடங்காகும். இது இன்றும் தமிழகப் பழங்குடிகளிடம் காணப்படுகிறது. குறிப்பாக பழனி மலைப்பகுதியில் வாழக்கூடிய குன்னுவர், பளியர் ஆகியோரிடம் இச்சடங்கும் வெறியாட்டு என்னும் சொல்லாடமும் பயன்பாட்டில் உள்ளன. சங்க கால சமய வழிபாட்டிற்குள் இரு விதமான நிலைகள் காணப்படுகின்றன.

### வேலன் வெறியாட்டு பொது பண்பாடு

பண்பாட்டுக் கூறுகள் பெரும்பாலும் நில அமைப்பினை மையமாகக் கொண்டே இயங்கும். குறிஞ்சித்திணையில் நிகழும் வேலன் வெறியாட்டு என்னும் சடங்கு நெய்தல் நில மக்களும் பின்பற்றியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

‘ஆடு அரை புதையக் கோடை இட்ட
அடும்பு இவர் மணல்கோடு ஊர நெடும்பனை
குறிய ஆகும் துறைவனைப்
பெரிய கூறி ஆய் அறிந்தனளே’ (குறுந்.248)

*பெரிய கூறி* என்பதற்கு முருகனின் பெருமைபடக் கூறி வெறிப்பாட்டு அயர்ந்து, *ஆய் அறிந்தனள்*- தாய் அறிந்து கொண்டாள். புறநானூறு 375:19 ஆம் பாடலிலும் பெரிய கூறு வருவதாக உ.வே.சாமிநாதையர் குறுந்தொகைக் குறிப்புரையில் குறிப்பிடுகிறார் (சாமிநாதையர், 1947,ப்.516). முருகன் என்பது இடைப்பட்ட காலமாக இருக்கலாம். இந்த வேலன் வெறி அயர்தல் ஒரு காலத்தில் பொதுப்பண்பாடாகத் தொல்மூலப் பண்பாட்டாக (proto culture) இருந்திருக்க வேண்டும்.

தொல்குடிகள் வழிபட்ட கடவுள் அச்சம் தருவதாகவும் அது காடுகளிலும் மலைகளிலும் வாழ்வதாக நம்பினர். மற்றொன்று திணைக்குடிகள் (நாகரிக மாற்றத்தைக் குறிக்கிறது) கடவுளை ஊர் மன்றத்தில் உறையுமாறு செய்து அதற்குப் பலியிட்டனர். கடவுளைக் குடிகொள்ள செய்தனர் (அகம்.168;9-20) இது ஒரு முக்கியமான படிமலர்ச்சி ஆகும். நெடுஞ்சுவர் எழுப்பி, விட்டம் அமைத்து, வைக்கோல் கூரை வேய்ந்து எழுது அணி கடவுள் தின்னை மெழுகி பலி கொடுத்துள்ளனர் (அகம்.168).

தொல் சமயத்தில் நீண்ட கால படிமலர்ச்சியில் கடவுளைக் கோயில் கட்டி வணங்கும் நிலைக்கு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. இந்தக் காலக்கட்டத்தில் தான் அச்சம் தரும் தெய்வம் (malevolent deities) என்னும் கருத்தாக்கத்திலிருந்து அன்பு செலுத்தும் பொருளாகக் கடவுள் (benevolent deities) மாறியுள்ளதை அறிந்துகொள்ள முடிகிறது.

தொல் சடங்கில் உயிர்ப்பலி இருந்தது அது இன்றும் தொடர்கிறது. பூக்களைக் கொண்டு வழிபடும் கடவுளாக மாற்றம் அடைந்துள்ளது. நெல்லும் மலரும் தூய் கைதொழுது (முல்லைப்பாட்டு 8-11) *பலியிடுதல்* வைதீக, சமண பௌத்த சமயங்களை ஏற்காக சமயத்தில் தங்கி விட்டது. *பூசை* வைதீக சமண பௌத்த சமயங்களில் பூ வைத்து வழிபடுவது ஏற்கப்பட்டு, பலியிடுதல் (Taboo) விலக்கப்பட்டது. மணிமேகலையில் வரும் நீகர் மலர் நீயே கொணர்வாய் என மாதவி கூறுவதால் அறியமுடிகிறது. பெரியபுராணத்தில் வரும் வேடர் குலத்தைச் சார்ந்த திண்ணன் இறைச்சியை இறைவருக்கு வழங்கும் நிலையின் மூல அறிந்துகொள்ளலாம்.

எயினர் மறவர் போன்ற தொல்குடிகளிடம் பலிக்கொடுக்கும் வழக்கம் இருந்துள்ளது. வைதீகத்தையும் மெல்ல தழுவியுள்ளனர். சிலம்பு வேட்டுவ வரியில் வரும் எயினர்களின் வழிபாட்டு மரபு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. தெய்வத்திற்குக் கொடுக்கும் பொருள் அல்லது படைத்தல் இதில் இன்றும் இருவிதமான தன்மைகள் காணப்படுகின்றன. (simple to complex) எளிய நிலையிலிருந்து கடினநிலைக்கு. 1.சமைக்காத உணவுகள் வழங்குவது (raw offering) 2. சமைக்கப்பட்ட உணவினை வழங்குவது (cooking offering) தேன் தினை, பழங்கள், தேங்காய், வெற்றிலை போன்றவைச் சுட்டலாம். பொங்கல் வைத்தல் போன்றவைகள் சமைக்கப்பட்ட உணவுகளாகும். சங்க காலங்களில் தெய்வத்திற்குப் படைக்க ஆண் பூசாரிகளும் பெண் பூசாரிகளும் (சாலினி) இருந்துள்ளனர். சிலப்பதிகார வேட்டுவ வரியில் வரும் சாலினி என்னும் பெண் பூசாரி குறிப்பிடப்படுகிறாள். ஆண் பூசாரிகள் பூசை மேற்கொள்ளும் அதே நிலவுடைமைச் சமுதாயத்தில் கட்டுப்பகுதியில் வாழும் எயினர்களிடம் பெண் பூசாரி வழக்கத்தில் இருந்துள்ளது.

தொல்சமய மரபிலிருந்தே தொடர்ச்சியான மாற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. இதனைப் படிமலர்ச்சி (evolution) எனலாம். இந்தப் படிமலர்ச்சியின் அசைவியக்கம் ஒரு சீரான மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. இயற்கைப் பொருளின் மீது ஆற்றல் உள்ளதாக பழங்கால மனிதர்கள் நம்பினர், சங்க இலக்கியத்திலும் இது போன்ற இயற்கைப் பொருளின் மீது உள்ள வழிபாட்டு மரபு நன்கு புலனாகிறது. தெய்வம் சேர்ந்த பராடை வேம்பின் (அகம் 309-4), மன்ற மராஅத்த பேஎம் முதிர்கடவுள் (குறுந்-87-10) போன்ற சான்றுகள் மரத்தில் அணங்கு உள்ளதை குறிக்கிறது.

தொல் தமிழர் சமயத்தின் முக்கிய கூறுகளில் ஒன்று இயற்கை வழிபாடு (naturism) மேலோங்கி இருந்துள்ளது. பேய்கள் போரில் புண்பட்டவர்களின் காயங்கள் வழியாக இரத்தத்தை உறுஞ்சும் என்றும் அதனால் போர்களத்தில் காயம் பட்ட வீரர்களுக்குக் கடுகினைப் (ஐயவி) புகைத்து எருக்கம் தழையுடன் வேப்பிலையும் மனையில் செருகப்பட்டது. காஞ்சிப் பண்ணைப் பாடி பேய்களை விரட்டியுள்ளனர்

(புறம்.281-296). இது வீரயுக காலமா இருந்தாலும் தொல்பண்பாட்டே கடைபிடிக்கப்பட்டு வந்துள்ளது. சிற்றரசர்கள் ஆட்சிக்கு உட்பட்ட எல்லைகளைப் பாதுகாக்க எல்லைப் புறங்களில் பழங்குடிகள் வேடுவர்களைக் காவல் அரணாக வைத்திருந்தனர் '*வேட்டுப்புழை அருப்பம் மாட்டிக் காட்ட*' முல்லைப் பாட்டில் பதிவாகியுள்ளது.

| | | |
|---|---|---|
| **Malevolent deities** (அச்சம் தரும் கடவுள்) | ➔ | **benevolent deities** (அன்பு செலுத்தும் கடவுள்) |

**அணங்கு சூர் ➔ கொற்றவை ➔ கொற்றவைச்சிறுவ, சிவன் திருமால்,**

கொற்றவை இவை இரண்டிற்கும் இடைப்பட்ட வடிவமாக இருக்க வேண்டும். அணங்கு சூர், பேய், பேய்மகள், சூரரமகளிர், பூதம், போன்றவை மீவியல் காலம் ஆகும் liminal period) அச்சத்தை ஏற்படுத்தும் தெய்வங்களே மிகுதி. தொல்குடிகளின் சமயத்தில் உயிர்ப்பாற்றல் வழிபாடாக அணங்கு சூர் முதலியன இருந்துள்ளதை அறியமுடிகிறது.

நாகம் போன்ற விலங்குகளும் அஃறிணைப் பொருள்களும் வழிபடு பொருளாக இருந்துள்ளது அதுவே பிறகு மனிதப் பண்பேற்றல் / மனித உருவேற்றல் (Anthropomotphism) மூலம் தாய்த்தெய்வமாக ஆக்கப்பட்டுள்ளது.

*நாகம் +* *அம்மன் – நாகம்மன்*
*அம்மா – நாகம்மா*
*அம்மை – நாகம்மை*
*அப்பன் – நாகப்பன்*
*ராஜன் – நாகராஜன்*

போன்ற பெண்பால் ஆண்பால் பெயர்கள் கொண்டு தெய்வ உருவங்களாக மாறியுள்ளது. அஃறிணை பெயர்களில் உயர்திணைப் பெயர்கள் இணைந்து உயர்தினையாக்கம் நிகழ்ந்துள்ளது.

மழையை வழிபட்டனர் அது பால் காட்டாத தன்னையிலிருந்து பின் நாட்களில் ,மனித பண்பேற்றம் நிகழ்ந்து உயர்தினையாகம் நிகழ்ந்துள்ளது. இது சமூகநடத்தையின் வாயிலாகவும் பண்பாட்டு நகர்வுகளின் மூலம் மொழியின் ஒரு பகுதி வளர்ச்சி அடைந்துள்ளதை காட்டுகிறது. சிலம்பில் வரும் மாமழை போற்றுதும் பின் நாட்களில் மாரியம்மன் வழிபாட்டக மாறியுள்ளது. இதற்குச் சான்றாக கனநாத் உபயசேகர என்னும் இலங்கையைச் சேர்ந்த மானிடவியல் அறிஞர் அங்கு வழங்கும் பத்தினித்தெய்யோ வழிபாட்டினைக் குறிப்பிடுகிறார். இந்த மழை வழிபாடு அதனோடு தொடர்புடைய கண்ணகி வழிபாடே பிற்காலங்களில் மாரியம்மன் வழிபாடாக மாறியதாகக் குறிப்பிடுகிறார்.

மன்றம், சதுக்கம், சந்து ஆகியவற்றில் தெய்வம் உறையும் என நம்பினர் அதனை வழிபட்டனர். சதுக்கத்தில் இருப்பது சதுக்குபூதம் என அழைக்கப்பட்டது. சிலம்பில் இது தொடர்பான கதை ஒன்று வழங்கப்படுகிறது. அதே காலக்கட்டத்தில் சம்பாபதி கோயில் பூதம் இருந்தனைக் குறிப்பிடுகிறது. அந்த வடிவம் இன்றும் இருக்கின்றது. மணிமேகலை இந்தக் கோயிலில் இருந்தே உலகில் உள்ள அனைவரின் பசிப்பிணியினைப் போக்க காயசண்டிகையின் வடிவல் மாறி உணவளித்தாள் என மணிமேகலையின் வரியின்மூலம் அறியமுடிகிறது.

**மழைச்சடங்கு**

பழந்தமிழர் இயற்கை ஆற்றலைக் கடவுளாக மாற்றினர். சான்றாக மழை அதிகமானாலும் அல்லது குறைந்தாலும் அந்த இறையற்கை ஆற்றல் மேல் மனித உணர்ச்சி ஏற்றி ஒரு குறிப்பிட்ட சக்தியின் கோபத்தின் காரணமாகவே இவ்வாறு நடக்கிறது என நம்பினர். அதானல், அதனைச்

சாந்தப்படுத்த ஒரு வகையான சடங்கினை ஏற்படுத்திக் கொண்டனர். இவ்வாறு உருவானதே மழைச்சடங்கு ஆகும்.

'*குன்ற குறவன் ஆர்ப்பின் எழிலி*
*நுண்பல் அழிதுளி பொழியும் நாட*
*நெடுவரைப் படப்பை நும் ஊர்*
*கடுவரல் அருவி காணினும் அழுமே'* (ஐங்.251)

(குறவன் உழவு முதலாகிய வினைக்கு ஆர்ப்பின், அதற்கு இன்றி யமையாத நீரை நுண்மழை பொழியும் நாடன்)

'*மலைவான் கொள்க என உயிர்பலி தூஉய்*
*மாரியான்று மழை மேக்கு உயர்க எனக்*
*கடவுட் பேணிய குறவர் மாக்கள்*
*பெயல்கண் மாறிய உவகையர்'* (புறம்.143)

இது போன்று சங்கப் பாடல்களில் சான்றுகள் கிடைக்கின்றன. இன்றும் மழைவேண்டி மழைச்சடங்கு நடத்தப்படுகிறது.

இன்றும் மழையை வருவிக்க சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. குறிப்பாக பளியர் பழங்குடிகளிடம் மழையை வரவைக்கும் பளியரை மழக்கட்டி பளியர் என்றே அழைக்கப்படுகின்றனர். பொதுச்சமூக அமைப்பிலும் இவ்வகையான நம்பிக்கை இருந்துள்ளது. கார்காத்தார் என்னும் சமூகம், தான் செய்த அறத்தின் செயலால் மழையை வேண்டும்போது மழையை வரவைப்பவர்கள் காரினை காத்தார் என பொருள்படும். அந்த வழிபாட்டு மரபிலிருந்தே இன்று ஒரு சமூகமாக மாறியுள்ளதை அறியமுடிகிறது.

**மானிடவியல் ஆய்வும் காலவரையறையும்**

சங்க காலம் குறித்த பல ஆய்வுகள் வந்துள்ளன. பெரும்பாலும் வரலாற்றுப் பின்புலத்திலே ஆராயப்பட்டுள்ளன. பேரா.வையாபுரிப்பிள்ளை பெரும்பாலும் சொற்களை வைத்துக்கொண்டு அந்தச் சொல்லின் பொருள் எந்த வரலாற்றுச் சான்றுகளுடன் ஒத்துள்ளதோ அதனை வைத்துக் கொண்டு காலத்தினைக் கணித்துள்ளார். பேரா.வ.அய்.சுப்பிரமணியம் மொழியின் அமைப்பினைக் கொண்டு காலத்தினைக் கணித்துள்ளார் (Dating of Sangam Age 1970) சங்க இலக்கியத்திற்கு ஒருங்கிணைந்த துறையான மானிடவியல் ஆய்வுகளின் மூலம் காலக் கணிப்பினை மேற்கொள்ளும் போது துள்ளியமாக கணிக்க இயலும்.

அ) பூர்வகுடிகள் தொடர்பான தொல் வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கின்றன. சான்றாகக் கல்திட்டை (dolmons cist), கல் பதுக்கைகள், நடுகற்கள் (Hero stones) முதுமக்கள் தாழி, போன்ற பெருங்கற்கால வரலாற்றுச் சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. கற்காலம் பற்றிய குறிப்புகள் இல்லை இரும்பு பற்றிய குறிப்புக்கள் இலக்கியத்திலும் சான்றுகள் கிடைப்பதால் சங்க கால சமூகம் இரும்பு காலத்தை ஒட்டியது எனக் கருத இடமுள்ளது. இனவரைவியல் வகுக்கும் போது கிடைக்கும் தரவுகளின் அடிப்படையில் கால வரையறையும் அதனை ஒட்டிய பண்பாடுகளையும் ஆவணப்படுத்த வேண்டும். சங்க இலக்கியத்தில் கல் திட்டை, கல் பதுக்கை போன்ற பெருங்கற்கால நினைவுச்சின்னங்கள் கிடைத்தாலும் அது அந்த காலத்தியது எனக் கருத இயலாது. பெருங்கற்காலத்தின் இறுதிக்காலத்தில் சங்க காலம் நிகழ்ந்திருக்கலாம் என ராஜன் (2004, ப. 27) குறிப்பிடுகிறார்.

ஆ) சங்க இலக்கியத்தில் காணப்படும் சடங்குகளில் மீவியல் தன்மை (limanal period) காணப்படுகின்றன. மீவியல் தன்மை கொண்ட பாடல்கள் அதில் பின்பற்றப்படும் சடங்குகள் ஒரு வேளை காலத்தால் முந்திய பாடல்களாக இருக்க வாய்ப்புள்ளது.

இ) ஒரு குறிப்பிட்ட சடங்கினை ஆராய்கிறபோது அதில் பின்பற்றப்பட்ட பலச் சடங்குகள் காணப்படுகின்றன. குறிப்பாக மணச்சடங்கில் தொன்மையான சிலம்புகழி நோன்பு முதலாக மாலை மாற்றிக்கொள்ளும் திருமணமும், உடன்போக்கு திருமணங்களும் காணப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில் காட்டப்படும் திருமணம் பிறப் பாண்பாட்டு ஏற்பினை அறியமுடிகிறது. மணச்சடங்கின் படிமலர்ச்சியையும் அறியமுடிகிறது.

**அடிக்குறிப்பு**

1. *மலர்ந்த பொய்கை முகைந்த தாமரைத்*
*தண்டுறை யூரன் வரைக*
*எந்தையும் கொடுக்க வெனவேட் டேமே* (ஐங்குறுநூறு.6)

2. *வரைய வந்த வாய்மைக் கேற்ப*
*நமர்கொடை நேர்ந்தன ராயினவருட*
*னேர்வர்கொல் வாழி தோழிநங் காதலர்*
*புதுவராகிய வரவு நின்*
*வதுவைநா ணொடுக்கமுங் காணுங் காலே* (நற்றிணை. 393)

*3. எந்தையும் கொடீஇயர் வேண்டும்.* (குறுந்தொகை.5)

4. நும்மனைச் சிலம்பு கழீஇ யயரினும் /
எம்மனை வதுவை நன்மணங் கழிகென (ஐங்குறுநூறு.99)

5. மைப்பு அறப் புழுக்கின் நெய்க் கனி வெண் சோறு
வரையா வண்மையொடு புரையோர்ப் பேணி,
புள்ளுப் புணர்ந்து இனிய ஆக, தெள்ஒளி
அம் கண் இரு விசும்பு விளங்க, திங்கட்
சகடம் மண்டிய துகள் தீர் கூட்டத்து,
கடி நகர் புனைந்து, கடவுட் பேணி,
படு மண முழவொடு பரூஉப் பணை இமிழ,
வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்று,
பூக்கணும் இமையார் நோக்குபு மறைய,
மென் பூ வாகைப் புன் புறக் கவட்டிலை,
பழங் கன்று கறித்த பயம்பு அமல் அறுகைத்
தழங்குகுரல் வானின் தலைப்பெயற்கு ஈன்ற
மண்ணு மணி அன்ன மாஇதழ்ப் பாவைத்
தண் நறு முகையொடு வெண் நூல் சூட்டி,
தூ உடைப் பொலிந்து மேவரத் துவன்றி,
மழை பட்டன்ன மணல் மலி பந்தர்,
இழை அணி சிறப்பின் பெயர் வியர்ப்பு ஆற்றி,
தமர் நமக்கு ஈத்த தலைநாள் இரவின்,
'உவர் நீங்கு கற்பின் எம் உயிர் உடம்படுவி!
முருங்காக் கலிங்கம் முழுவதும் வளைஇ,
பெரும் புழுக்குற்ற நின் பிறைநுதற் பொறி வியர்
உறு வளி ஆற்றச் சிறு வரை திற ' என
ஆர்வ நெஞ்சமொடு போர்வை வவ்வலின்,
உறை கழி வாளின் உருவு பெயர்ந்து இமைப்ப,
மறை திறன் அறியாள்ஆகி, ஒய்யென

நாணினள் இறைஞ்சியோளே பேணி,
பரூஉப் பகை ஆம்பற் குரூஉத் தொடை நீவி,
சுரும்பு இமிர் ஆய்மலர் வேய்ந்த
இரும் பல் கூந்தல் இருள் மறை ஒளதத்தே. (அகநானூறு. 136)

6.அணங்கறி கழங்கின் கோட்டம் காட்டி
வெறியென உணர்ந்த உள்ளமொடு மறுயறுத்து
அன்னை அயரும் முருகு" (நற்றிணை. 47)

7. *அறுவை தோயும் ஒரு பெருங்குடி /*
*சிறுபை நாற்றிய பல்தலைச் செங்கோல் /*
*ஆகுவது அறியும் முதுவாய் வேல கூறுக மாதோ*
*நின் கழங்கின் திட்பம் .* (அகநானூறு.195)

**துணைநூல் பட்டியல்**


அறவாணன், க. ப. (2005). *தமிழ் மக்கள் வரலாறு பழந்தமிழர் வழிபாடுகள்*. சென்னை: தமிழ்க்கோட்டம்.

காசிவிசுவநாதன் செட்டியார், வெ. பெரி. பழ. மு. (1949). *கலித்தொகை நச்சினார்க்கியர் உரை*. சென்னை: சைவசித்தாந்தநூற் பதிப்புக் கழகம்.

காந்தி, க. (2003). *தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்.* சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

கார்த்திகேசு சிவத்தம்பி. (2003). *பண்டைத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி*. சென்னை: மக்கள் வெளியீடு.

சதீஸ். கோ. (2016) *முல்லைத்திணைக் குடிகள்*. Retrived from http://www.keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungalnoolagamapr14/26380-2014-04-25-07-18-08

சண்முகம் பிள்ளை, மு. (1996). *சங்கத்தமிழரின் வழிபாடும் சங்குகளும்*. சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

சாமிநாதையர் உ. வே. சா. (2013). *சிலப்பதிகாரம் மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லார் உரையும்* (மறுபதிப்பு). சென்னை: டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்.

சாமிநாதையர், உ. வே. (1918). *பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்*. சென்னை: கமர்ஷியல் அச்சுக்கூடம்.

சாமிநாதையர், உ. வே. (1935). *புறநானூறு* (3ஆம்பதிப்பு). சென்னை: லாஜர்னல்அச்சுக்கூடம்.

சாமிநாதையர், உ. வே. (1947). *குறுந்தொகை மூலமும் உரையும்*. சென்னை: மூன்றாம் பதிப்பு கபீர் அச்சுக்கூடம்.

சுப்பிரமணியஐயர், ஏ. வி. (2008). *தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி*. சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.

சுப்பிரமணியன், க. (1993). *சங்ககாலச் சமுதாயம்*. சென்னை: நியூசெஞ்சுரி புக்ஹவுஸ்.

செல்வராசு, சிலம்பு. நா. (2016). *தொல்தமிழர் திருமணமுறைகள்*. சென்னை: காலச்சுவடு பதிப்பகம்.

தனஞ்செயன், ஆ. (2014). *தமிழில் இலக்கிய மானுடவியல்*. சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

பக்தவத்சல பாரதி, (2003). *பண்பாட்டு மானிடவியல்*. சிதம்பரம்: மெய்யப்பன் தமிழாய்வகம்.

பக்தவத்சல பாரதி. (2013). *பாணர் இனவரைவியல்*. சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

பக்தவத்சல பாரதி. (2002). *தமிழர் மானிடவியல்*. சிதம்பரம்: மெய்யப்பன் தமிழாய்வகம்.

பக்தவத்சல பாரதி. (2007). *தமிழக பழங்குடிகள்*. திருச்சி: அடையாளம் வெளியீடு.

பக்தவத்சல பாரதி. (2011). *பண்பாட்டியல் நோக்கில் பண்டைத் தமிழர்சமயமரபுகள்*. புதுச்சேரி: மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்.

பக்தவத்சல பாரதி. (2012). *மானிடவியல் கோட்பாடுகள்*. திருச்சி: அடையாளம் வெளியீடு.

பக்தவத்சல பாரதி. (2014). *இலக்கிய மானிடவியல்*. திருச்சி: அடையாளம் வெளியீடு.

மறைமலையடிகள். (1919). *முல்லைப்பாட்டுஆராய்ச்சி* (3வது பதிப்பு). பல்லாவரம்: டி.எம். அச்சுக்கூடம்.

மாணிக்கம், வ. சு ப. (2002). *தமிழ்க் காதல்*. சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.

மாதையன், பெ. (2004). *சங்க இலக்கியத்தில் வேளாண் சமூகம்*. சென்னை: நியூசெஞ்சுரி புக்ஹவுஸ்.

மாதையன், பெ. (2004). *சங்ககால இனக்குழு சமூகமும் அரசு உருவாக்கமும்*. சென்னை: பாவை பப்ளிகேஷன்.

ராஜன், க. (2004). *தொல்லியல் நோக்கில் சங்க காலம்*. சென்னை: உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.

வேங்கடசாமி நாட்டார், ந. மு. (1953). *சிலப்பதிகாரம் மூலமும் உரையும்*. சென்னை: கழக வெளியீடு.

வேங்கடசாமிநாட்டார் ந. மு., & வேங்கடாசலம்பிள்ளை, ரா. (1943). *அகநானூறு களிற்றியானை நிரை: ந. மு. வே. & ரா. வேங்கடாசலம்பிள்ளை பதவுரை*. சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

வேங்கடசாமிநாட்டார் ந. மு., & வேங்கடாசலம்பிள்ளை, ரா. (1944). *அகநானூறு மணிமிடைப் பவளம்: ந. மு. வே. & ரா. வேங்கடாசலம்பிள்ளை பதவுரை*. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

வேங்கடசாமிநாட்டார் ந. மு., & வேங்கடாசலம்பிள்ளை, ரா. (1944). *அகநானூறு நித்திலக்கோவை: ந. மு. வே. & ரா. வேங்கடாசலம்பிள்ளை பதவுரை*. சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

Meenakshi Sundaran, T. P. (1958). *Mullai-p-pattu*. Madras: Orient Longmans.

Meenakshisundaran, T. P. (1965). *History of Tamil Literature*, Deccan college, Poona.

Morgan, L. H. (1877). *Ancient Society or Researches in The Lines of Human Progress from Savagery, Through Barbarism to Civilization*. New York: Henry Holt and Company.

Ramachandra Dikshitar, V. R. (1930). *Studies in Tamil language and history*. London Luzac& co,

Sirinivasa iyanar, P. T. (1928). Environment and culture, *Triveni*, 1(3), 72. Madras.

Thaninayagam, X. S. (1997). *Landscape and Poetry*. Chennai: International Institute of Tamil Studies.

Thirunavukkarasu, K. D. (1994). *Chieftains of the Sangam Age*. Chennai: International Institute of Tamil Studies.

Vaiyapuripillai, S. (1956*). History of Tamil Language and Literature*. Madras: N.C.B.H.